IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 26/2023

| | |
|---|---|
| Deposition of Witness | : PW1 |
| Name | : மைதிலி (வயது – 51) |
| Father's Name /W/o | : க/பெ பழனிவேல் |
| Religion | : இந்து |
| Calling | : – |
| Address | : சென்னை. |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 21.01.2026.

## 6 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பழனிவேல் என்பவர் ரயில்வே துறையில் SENIOR MOTOR MAN வேலை செய்து வந்தாரா என்றால் ஆம். ரயில்வே ஊழியர்கள் ஓய்வூதிய விதிகள் 1993 இன் படி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் பெயரை ரயில்வே துறைக்கு தெரிவிக்கவேண்டும் என்றால் சரிதான். பழனிவேல் என்பவர் ரயில்வே துறையில் தன் குடும்ப உறுப்பினர்கள் பட்டியலில் பவானி என்பவரை மனைவியாகவும் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மகள்களாக தெரிவித்துள்ளார். வாதிகளை குடும்ப உறுப்பினர்களாக தெரிவிக்கவில்லை என்றால் 2014 ஆம் ஆண்டில் ரயில்வே அனுப்பிய கடிதத்தில் பவானி மற்றும் காயத்ரி பெயரை குடும்ப உறுப்பினர் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு என் பெயர் மற்றும் என் மகன் பெயரை சேர்த்துவிட்டதாக தெரிவித்தனர். மேற்படி கடிதம் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. பழனிவேல் எப்போது காலமானார் என்றால் 29.08.2022 தேதியில் காலமானார். ரயில்வே நிர்வாகத்தில் பழனிவேல் இறந்ததற்கான ஈமச்சடங்கிற்கான பணத்தை ரயில்வே நிர்வாகம் பவானி (1 ஆம் பிரதிவாதி) என்பவரிடம் வழங்கினார்களா என்றால் கேள்விப்பட்டேன். 01.09.2022 தேதியில் ரயில்வே துறையில் நான் மற்றும் என் மகன்தான் பழனிவேலுக்கு உண்மையான வாரிசு என்று கடிதம் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். பழனிவேல் குடும்ப நல நீதிமன்றம் எண்.2 சென்னையில் OP.3236/2007 விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தாரா என்றால் சரிதான்.

3. மேற்படி மனுவில் என்னை ஒருதலைபட்சமாக்கிவிட்டு 02.01.2008 தேதியில் மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கட்டதா என்றால் ஆம். பழனிவேல் 15.04.2008 தேதியில் 1 ஆம் பிரதிவாதியை திருமணம் செய்துகொண்டார் என்றால் தெரியாது. நான் குடும்ப நல நீதிமன்றம் எண்.2 சென்னையில் MC.421/2008 ஜுவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு எனக்கு மாதம் ரூ.5000/- கொடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் ஆம்.

4. சென்னை குடும்ப நல நீதிமன்றம் எண்.2 நான் தான் பழனிவேலின் மனைவி என்று உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று OS.179/2008 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 15.11.2011 தேதியில் நான் பழனிவேலுக்கு மனைவி என்று தீர்ப்பு வழங்கப்பட்டதா என்றால் ஆம். ரயில்வே துறை பழனிவேலுக்கு 08.04.2014 தேதியில் என் பெயரை வாரிசாக சேர்க்க வேண்டும் என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளை நீக்கவேண்டும் என்றும் கடிதம் அனுப்பினார்கள் என்றால் சரிதான். பவானி(1 ஆம் பிரதிவாதி) என்பவர் தான் பழனிவேலின் மனைவி என்று சென்னை CENTRAL ADMINISTRATIVE TRIBUNAL இல் OA.NO.145/2023 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.